20-01-2014 Dinamalar

# விரைவில் கோயம்பேடு வருகின்றன 10வது ரயிலுக்கான பெட்டிகள்





■ ஆந்திராவின் ஸ்ரீசிட்டி தொழிற்சாலையில், சோதனை முடிந்த நிலையில் தயாராக உள்ள, 10வது மெட்ரோ ரயில். ■ 12வது ரயிலின் 'போகி' எனப்படும் சக்கரத்துடன் கூடிய அடிச்சட்டத்தின் இயக்கத்தை அதிகாரிகள் சோதித்து பார்க்கின்றனர்.

– நமது நிருபர் –

ஆந்திராவில் உள்ள, ஸ்ரீசிட்டி ஆல்ஸ்டாம் மெட்ரோ ரயில் பெட்டி இணைப்பு தொழிற்சாலையில் தயாரான, பத்தாவது ரயிலுக்கான பெட்டிகள், கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனைக்கு, விரைவில் கொண்டுவரப்பட உள்ளன.

**26ம் தேதி வருகை**

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு, பிரான்ஸ் நாட்டு ஆல்ஸ்டாம் நிறுவனத்திடமிருந்து, 42 ரயில்களுக்கான, 168 பெட்டிகள் வாங்கப்படுகின்றன.

அதில், ஒன்பது ரயில்களுக்கான, 36 பெட்டிகள் மட்டும், பிரேசில் நாட்டில் உள்ள மெட்ரோ ரயில் தொழிற்சாலையில் தயாரிக்கப் படுகின்றன.

மூன்று ரயில்களுக்கான, 12 பெட்டிகள் பிரேசிலில் இருந்து, சென்னை கோயம்பேடு யார்டுக்கு கொண்டு வரப்பட்டு, டெஸ்ட் டிராக்கில் இயக்கி பரிசோதனை நடந்து வருகிறது.

மூன்று மற்றும் நான்காவது ரயில்களுக்கான, எட்டு பெட்டிகள், பிரேசிலில் இருந்து கப்பல் மூலம், 26ம் தேதி சென்னை வந்தடையும். மற்ற நான்கு பெட்டிகள் தயாரிக்கும் பணி, துரிதமாக நடந்து வருகிறது.

**சோதனை முடிந்தது**

இத்திட்டத்தில், மீதமுள்ள, 33 ரயில்களுக்கான, 132 பெட்டி களுக்கான, பாகங்கள் பிரேசிலில் இருந்து, ஆந்திரா மாநிலம் ரேணி குண்டா அருகே உள்ள, ஸ்ரீசிட்டி மெட்ரோ ரயில் பெட்டி இணைப்பு தொழிற்சாலைக்கு கொண்டு வரப் பட்டு உள்ளன.

அங்கு, பெட்டிகள் தயாரிக்கும் பணி, முழுவீச்சில் நடந்து வருகின்றன. அதில், 10வது ரயிலுக்கான, நான்கு பெட்டிகள் தயாரிக்கும் பணி முடிந்து, சென்னையிலிருந்து சென்ற, மெட்ரோ ரயில் அதிகாரிகளின் முன்னிலையில் இயக்க சோதனை நடத்தப்பட்டு உள்ளது.

**விரைவில்...**

11வது ரயிலுக்கான நான்கு பெட் டிகள் தயாரிக்கும் பணி முடிந்து, விரைவில் இயக்க சோதனை நடத்தப்பட உள்ளது. 12, 13, 14 மற்றும் 15வது ரயில்களுக்கான, 20 பெட்டிகள் தயாரிக்கும் பணி பல்வேறு கட்டங்களாக துரிதமாக நடந்து வருகின்றன.

பத்தாவது ரயிலுக்கான நான்கு பெட்டிகள், சென்னை கொண்டு வர, மெட்ரோ ரயில் அதிகாரி அனு மதி வழங்கியதும், அந்த பெட் டிகள் விரைவில் கோயம்பேடு மெட்ரோ ரயில்வே பணிமனைக்கு கொண்டு வரப்பட உள்ளன.